# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக் கூட்டம்

**2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 06ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–20–ல் நிதியாண்டிற்கான 14th CFC மாணிய நிதி திட்டத்தில் சாலைப் பணிகள் கீழ்கண்ட விவரப் படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அங்கீகற்றிற்கும் திட்ட ஒதுக்கீடு தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை இலட்சம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.30 வரதராஜன் தெரு தார்சாலை அமைத்தல் பணி | ரூ.12.00 |
| 2 | வார்டு எண்.4 பாசித் தெரு தார்சாலை அமைத்தல் பணி | ரூ.22.00 |
| 3 | வார்டு எண்.16 அழகேசன் சாலை தார்சாலை அமைக்கும் பணி | ரூ.18.00 |
| 4 | வார்டு எண்.16 தேவதாஸ் தெரு தார்சாலை அமைக்கும் பணி | ரூ.12.00 |
| மொத்தம் | | ரூ.64.00 |

அ.கு–

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. திட்ட ஒதுக்கிட்டிற்கு மேல் கூடுதலாகும் தொகை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் ஏற்கலாம்.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–20–ல் நிதியாண்டிற்கான 14th CFC மாணிய நிதி திட்டத்தில் சாலைப் பணிகள் கீழ்கண்ட விவரப் படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அங்கீகாரத்திற்கும் திட்ட ஒதுக்கீடு தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை இலட்சம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 JCK நகர் 1–வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் பணி | ரூ.42.00 |
| 2 | வார்டு எண்.30,29 புதுஏரி தெரு தார்சாலை அமைத்தல் பணி | ரூ.42.00 |
| 3 | வார்டு எண்.33 அண்ணா நகர் 7 மற்றும் 12 வது குறுக்கு தெரு தார்சாலை அமைக்கும் பணி | ரூ.42.00 |
| 4 | வார்டு எண்.27 குண்டூர் தெரு மற்றும் குறுக்கு தெரு தார்சாலை அமைக்கும் பணி | ரூ.50.00 |
| மொத்தம் | | ரூ.176.00 |

அ.கு–

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. திட்ட ஒதுக்கிட்டிற்கு மேல் கூடுதலாகும் தொகை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் ஏற்கலாம்.

ஆணையாளர் / தனி அலுவலர்
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## <u>அவசரக் கூட்டம்</u>

### <u>2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.</u>

பொருள்–1

வார்டு வரையரை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின் படி இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும் தெருக்கள்/நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரை படங்கள். மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணைத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட்டு வரைவு கருத்துரு மறுவரையறை ஆணையத்தின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. வரப் பெற்ற மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மறு ஆய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டது. இதன் படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு, மன்ற தீர்மானத்தின் படி (314/நாள் 31.01.2018) கருத்துருவினை அரசுக்கு அனுப்பட்டு, அரசு அனுமதியுடன் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தினை, காஞ்சிபுரம் (ம) செங்கல்பட்டு மாவட்டங்கள் என பிரிக்கப்பட்டது. இதில் செங்கல்பட்டு நகராட்சி, செங்கல்பட்டு மாவட்டத்தில் அடங்குவதாலும், ஏற்கனவே வார்டு வரையரையினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் அடங்கிய பகுதியாக பிரசுரம் செய்யபட்டதை தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் அடங்கிய பகுதியாக வார்டு வரையினை அரசு அனுதிப் பெற்று மீள அரசிதழில் பிரசுரம் செய்ய (Renotification) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.575/2020/தேர்தல் நாள்.21.01.2020–ல் வார்டு வரையறை முன் மொழிவை கோரப்பட்டுள்ளது. முன் மொழிவு அனுப்பி ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளின் எல்லைகளை தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அறித்துள்ள சுற்றறிக்கை எண்.டி–11/2017 ந.க.எண்.3174/2017/தேபொ1 நாள்.13.12.2017–ல் கண்டுள்ள கருத்துரு மற்றும் விதி முறைகளின்படி எல்லைகள் மறுவரையறை செய்த வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட 33 வார்டுகளில் எல்லை மறுவரையறைக்கு 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியுள்ள 62579 எண்ணிக்கையும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையர் கடித ந.க.எண்.554/2020/EE1, நாள்.27.01.2020–யின்படி இந்நகராட்சியில் 31.03.2019 வரையுள்ள வரி விதிப்பு செய்யப்பட்ட குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 11861 மற்றும் வரி விதிப்பு அல்லாத குடியிருப்புகளின் எண்ணிக்கை 4494 கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வார்டு எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டுள்ளன.

வரைவு வார்டு மறுவரையறை பிரேரணை உத்தேச புதிய வார்டு 1 முதல் 33 வரையுள்ள தெரு பட்டியல், எல்லைகள் மற்றும் வரைபடங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் மற்றும் மாவட்ட மறுவரையறை அலுவலர், செங்கல்பட்டு அவர்களின் கருத்துரு மற்றும் வழிக்காட்டுதலின்படி தயார் செய்யப்பட்ட 33 வார்டுகளின் வரைவு பிரேரணையை ஒப்புதல் செய்யலாம். மேலும் இப்பிரேரனையை மாவட்ட மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் பெற்று மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கலாம்.

பொருள்–3

செங்கங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க டெங்கு விழிப்புணர்வு ஸ்டிக்கர்ஸ் மற்றும் துண்டு பிரசுரம் ஆகியவைகளின் மூலம் IEC செய்யவும் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் கீழ்க்கண்டவாறு குறைவான தொகை கோரிய நிறுவனத்திற்கு அனுமதி வழங்க வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | Tirunelveli District multi puprpose service industrial Co-operative society Ltd., Ind no.tny-2, No.67/5, Dashpeek complex perumal junetion-627 701 | 1,10,900/– |
| 2 | The thoothukudi District Hi-tech printing and allied service industrial Co-operative society Ltd, Ind no tuti.5 | 1,14,940/– |

| | | |
|---|---|---|
| 3 | Kovilpatti small scale industries service industrial co-operative society Ltd., Ind No.tuti-9 No.86 A/7 Muthar complex New Road Kovil patti-628 501 | 1,16,650/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.1,10,900/- கோரிய வரிசை எண்.1-ல் உள்ள Tirunelveli District Multi puprpose service Industrial Co-operative society Ltd., Ind no.Tny-2 நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

பொருள்-4

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு புதிய மாவட்டமாக அறிவித்து துவக்க விழாவிற்கு 29.11.2019 தேதியன்று இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வருகை தந்துள்ளார். அப்பணி தொடர்பாக 28.11.2019 மற்றும் 29.11.2019 தேதியன்று துப்புரவு பணியாளர்களுக்கு அவசரம் அவசியம் கருதி உணவு பொருட்கள் மற்றும் இதர வசதிகள் செய்வதற்கு கீண்டவாறு குறைவான விலைப்புள்ளி கோரிய நபருக்கு அதற்கான தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.K.வெங்கடேசலு, எண்.4/1 Valluvar lane sayed yahoob street, Chengalpattu. | 1,21,520/- |
| 2 | திரு.E.சந்திரன் எண்.87, மேட்டுதெரு, 73, கௌத்தூர் கிராமம் வெங்கடபுரம் Post செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்-603 2014 | 1,18,384/- |
| 3 | திரு.G.மனோகர், எண்.399, Big Melamaiyur, Thirukkazukkundram Road, Vallam Bus stop, செங்கல்பட்டு | 1,22,696/- |

மேற்படி 26.11.2019 தேதியில் வரப் பெற்ற விலைப்புள்ளியில் குறைவான தொகை ரூ.1,18,384/- ஐ கோரிய திரு.E.சந்திரன் என்பவருக்கு அதற்கான மேற்படி செலவின தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

அ.கு-

1.மேற்படி நடைபெற்ற விழாவிற்கு பணிபுரிந்த துப்புரவு பணியாளர்களுக்கு அவசரம் அவசியம் கருதி உணவுப் பொருட்கள் விநியோகம் செய்த திரு.E.சந்திரன் என்பவருக்கு செலவினத் தொகை வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. அவசர அவசியத்திநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

அ.கு–

அவசரம் அவசியம் கருதி உடனடியாக ஸ்டிடிககர்ஸ் அச்சிட்டு வழங்கியதால் மற்றும் தொகை வழங்க மன்றம் முன் அனுமதி அளிக்கலாம்.

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதாரம் பிரிவில் கீழ் இயங்கி வரும் MCC தூக்குமரம் குட்டையில் Power sprayer Machine (மருந்து தெளிப்பான் தானியங்கி) ஒன்று தேவைப்படுகிறது. கோடைகாலம் வருவதால் ஈ மருந்து தெளிக்கவும் E7 Solution அதிகளவில் தெளிக்கவும் இயந்திரத்தை வாங்க வேண்டியுள்ளது. மேலும் சாதாரண (9 Lit) Brass sprayer (மருந்து தெளிப்பான்) தேவைபடுவதால் ஒரு Power sprayer (9 Lit) ஐணுயலநச 3 division களுக்கு 2 வீதம் தோராய செலவினம் ரூ.2.00 (இரண்டு) இலட்சத்திற்கு வாங்கி பயன்படுத்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.194.00 கோடி மற்றும் ஆண்டு பராமரிப்பு தொகை ரூ.4.98 கோடி எனவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகைக்கு நிர்வாக அங்கீகாரமும் நிதி ஒதுக்கீடு செய்து தரவும் அரசிடம் கோர மன்ற ஒப்புதலுக்கு.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தல் முழு தொகையும் மாண்யமாக ஒதுக்கீடு செய்து தர அரசிடம் கோரலாம்.

ஆணையாளர் / தனி அலுவலர்
செங்கல்பட்டு நகராட்சி